JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | **61/2017** |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | **P.W. 13** | Prosecution /Defence / Court | |
| Name | **V.V. சிவக்குமார் (Inspector)** | Village | வீரபாண்டி காவல் நிலையம், தேனி மாவட்டம் |
| Father's Name | வீரமலை | Taluk | |
| | | Age | |

**A**1, **A**2 **present**.

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of **Date 08.07.2026.**

**முதல் விசாரணை**

**1)** நான் தற்போது தேனி மாவட்டத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் பெருந்துறை காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணியில் இருந்த போது கடந்த 20.09.2016 ம் தேதி சிறப்பு உதவி ஆய்வாளர் கே.உத்ராஜ் நிலைய பொறுப்பில் இருந்த போது ஈரோடு 24 கேர் மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற இன்டிமேஷனை பெற்று மருத்துவமனைக்கு சென்று உள்நோயாளியாக அங்கு சிகிச்சையில் இருந்த சாமியாத்தாள், க.பெ.பழனிச்சாமி என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்று நிலையம் வந்து பெருந்துறை காவல் நிலைய குற்ற எண். 99/2016 சட்டபிரிவு 392 இ.த.ச. பிரிவின் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். முதல் தகவல் அறிக்கையின் நகலையும், சம்பந்தப்பட்ட ஆவணங்களையும் கணம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்து விட்டு பின்னர் எனது புலன் விசாரணைக்காக வழக்கு கோப்பினை என் வசம் ஒப்படைத்தார்.

2) பின்னர் 20.09.2016 ம் தேதி 21.00 மணிக்கு சம்பவ இடமான காஞ்சிக்கோவில் – சித்தோடு ரோடு, கவுண்டம்பாளையம் வாய்க்கால் அருகில் சம்பவ இடத்தை பார்வையிட்டு சம்பவ இட சாட்சிகள் அருள்முருகன் மற்றும் பிரகாஷ் ஆகியேர்கள் முன்னிலையில் மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்தேன். பார்வை மகஜரில் சம்பவ இட சாட்சிகள் இருவரிடம் சாட்சி கையொப்பங்களை பெற்றேன். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 13 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** சம்பவம் உண்மை என்று தெரியவந்ததால் சாட்சிகள் சாமியாத்தாள், விஜயலட்சுமி, கோபாலகிருஷ்ணன். சதிஷ், வினோதினி, பெரியசாமி, பழனிச்சாமி, அருள்முருகன் மற்றும் பிரகாஷ் ஆகியோர்களை விசாரித்து அவர்களது வாக்குமூலத்தை தனித்தனியே பதிவு செய்தேன். பின்னர் இவ்வழக்கின் சட்டப்பிரிவை இ.த.ச.392 விலிருந்து இ.த.ச 394 ஆக மாறுதல் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையை கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.14 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3. இவ்வழக்கின் எதிரிகளை கருமத்தம்பட்டி காவல் நிலைய ஆய்வாளர் திரு.சேகர் அவர்கள் கருமத்தம்பட்டி காவல் நிலைய குற்ற எண்.464/2016 மற்றும் 258/2016, 331/2016 வழக்குகளை பதிவு செய்து அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தை எதிரிகள் இருவரும் காஞ்சிக்கோவில் காவல் நிலைய குற்ற எண்.99/2016 வழக்கில் ஈடுபட்டு தாலிக்கொடியை பறித்து சென்றததாக ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துள்ளார்கள். எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரி பாண்டிக்குமார் அவரது வீட்டிலிருந்து எடுத்து கொடுத்த 6 பவுன் தாலிக்கொடியை கருமத்தம்பட்டி காவல் நிலைய ஆய்வாளர் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றியுள்ளார். கருமத்தம்பட்டி காவல் ஆய்வாளர் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றிய வழக்கு சொத்தான 6 பவுன் தங்க தாலிக்கொடியை படிவம் 91ன் மூலம் எங்களது காவல் நிலையத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். **படிவம் 91 அ.சா.ஆ.15 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி வழக்கு சொத்தை படிவம் 91ன் மூலம் நான் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளேன். **படிவம் 91 அ.சா.ஆ.16 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 14.11.2016ம் தேதி எதிரிகளை

சம்பிரதாய கைது செய்து பின்னர் 09.11.2016ம் தேதி வாதி சாமியாத்தாளை மீண்டும் விசாரித்து மறுவாக்குமூலம் பதிவு செய்து அதில் வழக்கு சொத்து 6 பவுன் தங்க தாலிக்கொடி தன்னுடையது என்று உறுதிப்படுத்தினார். 29.11.2016ம் தேதி எதிரிகளை அடையாள அணி வகுப்பு நடத்துவதற்கு சத்தியமங்கலம் குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு மனு அளிக்கப்பட்டு அதன்பேரில் கணம் சத்தியமங்கலம் குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்கள் சாட்சிகள் சாமியாத்தாள் மற்றும் விஜயலட்சுமி என்பவர்கள் முன்னிலையில் எதிரிகளை அடையாளம் காண அடையாள அணி வகுப்பு நடத்தியுள்ளார். **அடையாள அணி வகுப்பு நடைமுறைகள் அ.சா.ஆ.17 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் சாட்சி சாமியாத்தாளையும், விஜயலட்சுமியையும் 30.11.2016ம் தேதி மீண்டும் விசாரணை செய்து மறுவாக்குமூலம் பதிவு செய்தேன்.

4. பின்னர் 02.12.2016ம் தேதி இவ்வழக்கில் காயம்பட்ட சாமியாத்தாள் என்பவருக்கு சிகிச்சை அளித்த 24 கேர் தனியார் மருத்துவமனை மருத்துவர் திரு.ஜான்குருபாதம் அவர்களை விசாரித்து அவரது வாக்குமூலத்தை பதிவு செய்தேன். காயச்சான்றை மருத்துவரிடமிருந்து பெற்றேன். **சாமியாத்தாளின் காயச்சான்றிதழ் அ.சா.ஆ.18 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் 02.12.2016ம் தேதி இவ்வழக்கில் காயம்பட்ட விஜயலட்சுமி என்பவருக்கு சிகிச்சை அளித்த 24 கேர் தனியார் மருத்துவமனை மருத்துவர் திரு.ஜெகதிஷ் அவர்களை விசாரித்து அவரது வாக்குமூலத்தை பதிவு செய்தேன். காயச்சான்றை மருத்துவரிடமிருந்து பெற்றேன். **விஜயலட்சுமியின் விபத்துப்பதிவேடு அ.சா.ஆ.19 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 16.03.2017 ம் தேதி என்னுடைய புலன் விசாரணையை முடித்து எதிரிகள் 2 பேர் மீதும் சட்டபிரிவு 392, 394, 397 இ.த.ச. ஆகிய பிரிவுகளில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. வழக்கில் சான்று பொருட்கள் மற்றும் சான்றாவனங்கள் பின்னிட்டு காவல் நிலையத்தில் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் சொன்ன விதத்தில் முறையாக அடையாள அணிவகுப்பு நடத்தவில்லை என்றால் சரியல்ல. சாட்சிகளுக்கு முன்பாகவே எதிரிகளின் புகைப்படத்தை காட்டிவிட்டு பின்னிட்டு நான் அடையாள

அணிவகுப்பு நடத்தினேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் கருமத்தம்பட்டி காவல் ஆய்வாளர் எதிரிகளை கைது செய்யவும் இல்லை என்றாலும் எதிரியிடம் இருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெறவில்லை என்றாலும் எதிரிகள் இடம் இருந்து பொருட்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரியல்ல. நான் சொன்னது போல் சாட்சிகள் யாரையும் விசாரணை செய்யவில்லை என்றாலும் மறு விசாரணை செய்யவில்லை என்றாலும் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரம் மற்றும் தேதியில் சாட்சிகள் அங்கு இல்லை என்றும் எதிரிகளும் அங்கு இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சொன்னது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. சான்று பொருள் புகார்தாருக்கு பாத்தியப்பட்டது அல்ல என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகளுக்கும், இந்த வழக்குக்கும் சம்பந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது தவறுதலாக இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை